# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 05.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**

**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 20143/SCIC/2023

திருமதி.V.குமுதம் க/பெ.M.வேணுகோபால் மேல்முறையீட்டாளர்
எண்.3, திருவந்திபுரம் மெயின்ரோடு
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607 002

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சிதம்பரம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 30.01.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 27.02.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 12.08.2023 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 17.08.2023 |
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 17.11.2023 |
| 6 | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 10.10.2024 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 17.12.2024 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் அலுவலகம், சிதம்பரம் பதிவு மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “பார்வை- சிதம்பரம் மாவட்டப் பதிவாளர், திருமதி ச.மகாலட்சுமி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2583/ஆ1/2022 நாள் 29/11/2022 - பார்வையில் கண்ட செயல்முறை ஆணையில் “இறந்த வேணுகோபால் என்பவரின் வாரிசுகளிடையே பாகப்பிரிவினை ஏதும் செய்து கொள்ளாத நிலையில் வேணுகோபால் மகன் திரு.பாஸ்கர் மேற்படி கிராம புல எண்.128/4H 0.10 ஏர்ஸ்-ஐ திரு.மணிவண்ணன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார். எனவே மேற்படி பாக அட்டவணையின் மூலம் பிரிக்கப்படாத சொத்து கிரையம் அளிக்கப்பட்டு உள்ளது” எனக் கூறப்பட்டுள்ளது. மேற்படி வாரிசுதாரர்களுக்கிடையே பாகம் பிரிக்கப்படாத சொத்தை வாரிசுதாரர்களில் யாரேனும் ஒருவர் மட்டும் முழு சொத்தையும் கிரையம் கொடுக்க உரிமை அளித்து வழி வகை செய்யும் பதிவுச் சட்டம் 1908-ல் உள்ள பதிவு சட்டவிதி நகலை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்” என்பன போன்று 9 (ஒன்பது) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (05/06/2025) காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் தனது மகன் திரு.பாஸ்கர் என்பவருடன் கடலூர் மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து கலந்து கொண்டார். பொது அதிகார அமைப்பின் சார்பில், ஆணையத்தின் முன் திருமதி / செல்வி.ரா.தனலட்சுமி, மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), சிதம்பரம் பதிவு மாவட்டம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு ஏற்கனவே, 27/02/2023 தேதியிட்ட கடிதம் வாயிலாகவும், மீண்டும் 10/10/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாகவும் தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், 17/12/2024 தேதியிட்டு தனது ஆட்சேபணை மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதில் இனங்கள் 2 மற்றும் 4-க்கு கோரிய கட்டணத்தை செலுத்தியும், ஆவண நகல்கள் வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.**

**3. இன்றைய விசாரணையின்போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், சமீபத்திய இனவாரியான 30/05/2025 தேதியிட்டு மனுதாரருக்கு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரரின் பிரதிநிதியும், மேற்குறிப்பிட்ட தகவலைப் பெற்றுக் கொண்டதாக ஒப்புதல் தெரிவித்ததோடு, அத்தகவலில் குறிப்பிடப்பட்டுள்ள இனம் 4-க்கு, வழங்கிய தகவலில், எவ்வித வருவாய் ஆவணங்களும் தமது அலுவலகத்தில் பராமரிக்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் 11/04/2023 தேதியிட்ட தகவலில் கட்டணம் செலுத்தி, தான் கோரிய ஆவணங்களின் நகல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளதாகப் புகார் தெரிவித்தார். மனுதாரரின் வாதுரையை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது.**

**4. எனவே, அப்போதைய (11/04/2023 தேதிய) மாவட்டப் பதிவாளர், திருமதி/ செல்வி.மகாலட்சுமி, (தற்போது) மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), விருத்தாசலம் பதிவு மாவட்டம் அவர்கள், ஆவணங்களை முறையாக சரிபார்க்காமல் மேற்குறிப்பிட்ட தவறான தகவலை மனுதாரருக்கு வழங்கியதற்காக பிரிவு 20(1) மற்றும் 20(2) பிரிவின் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான காரண**

**விளக்கத்தை, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் பெற்று அதனை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஆணையம் உத்தரவு பிறப்பிக்கின்றது. இன்றைய விசாரணையின் போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்டப் பதிவாளர், சிதம்பரம் பதிவு மாவட்டம் அவர்கள் சமீபத்திய 30/05/2025 தேதியிட்ட தகவலை ஆணையம் பரிசீலனை செய்து, ஆவணங்களின்படியான உரிய தகவலை அனுப்பியிருப்பதாக பதிவு செய்து, ஆணையம் ஏற்கிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

ஓம்./-(**முகம்மது ஷகீல் அ்்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 20143/SCIC/2023</u>**

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்டப் பதிவாளர்
மாவட்டப் பதிவாளர் அலுவலகம்
சிதம்பரம்.

2.திருமதி /செல்வி. மகாலட்சுமி
முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது) மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்)
விருத்தாசலம் பதிவு மாவட்டம்
விருத்தாசலம்.

**மேல்முறையீட்டாளர்**

திருமதி.V.குமுதம் க/பெ.M.வேணுகோபால்
எண்.3, திருவந்திபுரம் மெயின்ரோடு
கூத்தப்பாக்கம், கடலூர் - 607 002.

நகல்

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
பட்டினப்பாக்கம், சென்னை-600 028.

2.பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.
RG/PC